**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**EA.2/2024 in E.P.No.17/2024**

**ம.சா.1 – நாகராஜன் , த/பெ.துரைச்சாமி**

**நாள். 05.08.2026**

**ம.சா. 1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த மனுவில் நான் 3ம் தரப்பினர் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த மனுவில் 3,4 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர் ஆகிவிட்டார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து என் தாயார் ராமாயி என்ற சிட்டம்மாளுக்கு 01.12.1988 அன்று சிந்தாமணி என்பவரிடம் கிரைய ஆவண எண். 2641/1988 மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்து விவரத்தில் 760/1 ல் 55 செண்ட், 760/3 ல் 1 ஏக்கர் 61 செண்ட், 760/4 ல் 1 ஏக்கர் 58 செண்ட், 760/6 ல் 0.55 செண்ட், 760/7 ல் 0.59 செண்ட், 761/1 ல் 0.82 செண்ட், 761/2 ல் 60 செண்ட் ஆக மொத்தம் 6 ஏக்கர் 30 செண்ட் மேற்படி கிரைய ஆவணத்தில் கட்டுப்பட்டது என்றால் சரிதான். மனுவில் சிந்தாமணிக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிட்ட சொத்து அவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தா என்றால் அவரின் மாமனார் சுப்பையா தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். சுப்பையா தேவர் சிந்தாமணி அம்மாவுக்கு உயிலின் மூலம் மேற்படி சொத்துக்களை பாத்தியப்படுத்தி உள்ளார் என்றால் சரிதான். உயில் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. உயில்ஆவணத்தில் என் தாயார் சிட்டம்மாளுக்கு 1 1/2 செண்ட் பாத்தியப்பட்டது ஆகும். உயில்பிரகாரம் சுப்பையா தேவரின் மகன் பழனிச்சாமி சிறு வயதில் இறந்து விட்டதால் அழகுச்சாமியின் மைனர் மக்கள் நல்லபெருமாள் என்ற ராஜா , பாலசுப்பிரமணி என்ற கண்ணனுக்கு எ–செடியூல் சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நல்லபெருமாள் என்ற ராஜா , பாலசுப்பிரமணி என்ற கண்ணன் ஆகியோர் கிரையம் பெற்றது பற்றி நான் மனுவில் சொல்லவில்லை என்றால் இல்லை. சிந்தாமணிக்கு உயிலில் எந்த உரிமையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் சிந்தாமணி அம்மாவையும், மைனர்களின் பாட்டி சீனியம்மாள் இருவரையும் நல்லபெருமாள் என்ற ராஜா , பாலசுப்பிரமணி என்ற கண்ணன் தங்கள் பராமரிப்பில் வைத்து பராமரிக்க வேண்டும் என உயிலில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சிந்தாமணி அம்மாளுக்கு முதல் கணவர் காலமான பிறகு 2வது கணவராக முருகேசனை திருமணம் செய்து கொண்டார் என்றால் இல்லை. மனுவில் பாரா 4–ல் சிந்தாமணி அம்மாள் மற்றும் அவரது 2வது கணவர் முருகேசனுக்கு எதிராக என் அம்மா ஒஎஸ் எண். 787/1995 வழக்கு தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சிந்தாமணியின் முதல் கணவர்

பழனிச்சாமி இறந்ததால் அவரது மைனர் நலனுக்காக இந்த உயில் எழுதப்பட்டது என்றால் அவரது கணவர் பழனிச்சாமி, சிந்தாமணி , பெருமாள், பெருமாள் மனைவி ஆகியோருக்காக எழுதப்பட்டது. 760/1ல் 27 1/2 செண்ட், 760/4ல் 1 ஏக்கர் 58 செண்ம், 760/7ல் 59 செண்ட் ல் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை, எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். நல்லபெருமாள், பாலசுப்பிரமணி இருவரும் அவருக்கு பாத்தியப்பட் உயில் பிரகாரம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட எ அட்டவணை சொத்து என சொல்லி ராமாயி என்ற சிட்டம்மாளை 1ம் பிரதிவாதியாகவும், சிந்தாமணி அம்மாளை 2ம் பிரதிவாதியாகவும், அவரது 2வது கணவர் முருகேசனை 3ம் பிரதிவாதியாகவும் சேர்த்து ஒஎஸ். 329/1997 வழக்கை திண்டுக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உயிலில் கண்டுள்ள எ-செடியூல் சொத்தானது தங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், 2ம் பிரதிவாதி சிந்தாமணி அம்மாள் தான் மைனர்களின் கார்டியன் என கூறிக் கொண்டு 1ம் பிரதிவாதியான இம்மனுவின் தாயார் ராமாயி என்ற சிட்டம்மாளுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியும் பிராது பி. செடியூல் சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி மீது சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின் நல்லபெருமாள், பாலசுப்பிரமணி ஆகியோர் திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் AS.64/2022 மேல்முறையீடு தாக்கல் செய்து மேல்முறையீட்டில் பிராது எ-செடியூல் சொத்தைப் பொறுத்து பகுதியாக 19.10.2005 அன்று அனுமதிக்கப்பட்டதாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதைப் பொறுத்து நான் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்ததாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனக்கு சாதகமாக தீர்ப்பாகி உள்ளதால் மேல்முறையீடு செய்யவில்லை. மகேஷ்வரிக்கும், விஜயலெட்சுமிக்கும் இந்த மனு சொத்துக்கும் சம்மந்தம் உள்ளதா என்றால் இல்லை. மனுவில் பாரா 8ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் விஜலெட்சுமி, மகேஷ்வரிக்கு சம்மந்தப்பட்ட நிலங்கள் என்பதால் இம்மனுவிற்கு எவ்வகையிலும் தொடர்பு இல்லை என்றால் சரிதான். மாவட்ட பதிவாளர் 1ம் எதிர்மனுதாரர் மீது ஆவணங்கள் போலியாக பதியப்பட்டுள்ளதால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சொல்லும் போது 2018ம் வருடம் திரும்ப பெறப்பட்டதால் மேற்படி போலி ஆவணங்கள் தொடர்ந்து பதிவுகளில் இருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனுவில் 2018ம் வருடம் திரும்ப பெற்றதாக சொல்லியுள்ளதற்கு விவரம் என்னவென்றால் திரும்ப பெறவில்லை, வழக்கு தலைமை குற்றவியல் நடுவரிடம் நிலுவையில் உள்ளது. உச்சநீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் மாவட்ட பதிவாளருக்கு ஆவணங்களை இரத்து செய்யும் அதிகாரம் திரும்ப பெற்றுள்ள நிலையில் நான் தொடுத்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. E.A.No. 1/2020 என மனு தாக்கல் செய்து தற்போது தாக்கல் செய்துள்ள E.A.No. 2/2024 ல் கூறப்பட்டுள்ள ஒ.எஸ்.119/2014

வழக்கு விவரங்கள் மற்றும் மாவட்ட பதிவாளர் வழக்கு பதிவு செய்ய பிறப்பிக்கட்டுள்ள உத்தரவு விவரங்கள், 1ம் எதிர்மனுதாரர் கிரைய ஆவணத்தினை இரத்து செய்ய வேண்டுமென பரிகாரம் கோரியுள்ள விவரங்கள் அனைத்தும் Not press செய்யப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே சங்கதிகளை கொண்டு தற்போது 2வது counter claim மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1வது மனு என்ன காரணத்திற்காக Not press செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. நான் அனைத்து விவரங்களும் தெரிந்து கொண்டு வழக்கிற்காக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கருத்துரையின் படியே எனது வழக்கறிஞரால் மெமோ தாக்கல் செய்து வழக்கு தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் ஒரு நீதிப்பேராமணை மனுவை WP.No.12377/2023 நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவில் என்ன பரிகாரம் கேட்டேன் என்றால் போலியான பத்திரத்தை இரத்து செய்யக் கோரி பரிகாரம் கேட்டிருந்தேன். உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அபிடவிட்டில் இந்த நீதிமன்றத்தில் இந்த மனுவில் சொல்லியுள்ள அதே சங்கதிகளைத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் ஒரு நீதிப்பேராமணை மனு WP.No.12377/2023 ல் உயர்நீதிமன்றம் அனைத்து ஆவணங்களையும் இரத்து செய்யச் சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நீதிப்பேராணையில் ஏற்கனவே மாவட்ட பதிவாளர் சிவில் நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு RC.No.1700/B3/2018.3 .23/04/2018 மற்றும் சார்பதிவாளர் ஒமு. எண்.847/R3/2021 dt.09.02.2021 ஆகிய உத்தரவுகளை இரத்து செய்து எந்த உத்தரவும் உயர்நீதிமன்றம் பிறப்பிக்கவில்லை எனறால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் கிரைய ஆவண எண். 5613/2019 ஐ இரத்து செய்வதற்கும் எவ்வித உத்தரவும் உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அதன் அடிப்படையில் 2ம் சார்பதிவாளரிடம் விசாரிக்க வேண்டும் என்று மனு கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த மனுவை சார்பதிவாளர் நிலுவையில் வைத்துள்ளாரா என்றால் சிவில் நீதிமன்றத்தை நாடுமாறு அறிவுறுத்தியுள்ளார். 2ம் எண் சார்பதிவாளர் என் மனுவின் மீது தற்போது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும் மனுவின் மீதான நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உத்தரவுதான் சார்பதிவாளர் கொடுத்த உத்தரவு என்றால் சரிதான். அது **எ.ம.சா.ஆ.1.** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this

contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.05 20:18:40 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.